# TNPSC GROUP-IV EXAM (MODEL QUESTIONS AND ANSWER)



# டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு

மாதிரி வினா-விடை 51

தொகுப்பு: சாம் ராஜேஷ்வரன்

## பொதுத்தமிழ் - இலக்கணம் - 5

136. விடைக்கேற்ற வினாவைத் தேர்க :
'இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா'
a. இரட்டைக்கிளவி இரட்டித்தால் என்னவாகும்?
b. இரட்டைக்கிளவி எவ்விடத்தில் வரும்?
c. இரட்டிற் பிரிந்திசையாதது எது?
d. இரட்டிற் பிரிந்திசைப்பது எது?
e. விடை தெரியவில்லை

137. கீழ்க்காணும் சொற்களில் தொழிற்பெயர் அல்லாததை அறிக.
a. அழுகை b. தொல்லை c. போக்கு d. தொழுகை
e. விடை தெரியவில்லை

138. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்.
பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார் – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.
a. தனி வாக்கியம் b. கலவை வாக்கியம்
c. செயப்பாட்டு வினை வாக்கியம்
d. பிறவினை வாக்கியம் e. விடை தெரியவில்லை

139. பிறவினை வாக்கியத்தை கண்டறிக:
a. புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பெருந்தேவனார் பாடியுள்ளார்
b. அகநானூற்றுப் பாடல்களை மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மர் தொகுத்தார்
c. அகநானூற்றைப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி தொகுப்பித்தான்
d. ஐங்குறுநூறு நூலைப் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் தொகுத்தார்
e. விடை தெரியவில்லை

140. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குரிய பொருந்தாதச் சொல்லைத் தேர்க :
<u>பண்புத்தொகை</u>
a. மென்கண் b. செய்வினை c. நன்கலம்
d. அருவிலை e. விடை தெரியவில்லை

141. 'நெறியினில் உயிர்செகுத் திடுவ' – இதில் '<u>உயிர்செகுத்து</u>' எவ்விலக்கணத்தைச் சார்ந்தது?
a. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
b. வினையாலணையும் பெயர்
c. வியங்கோள் வினைமுற்று
d. இரண்டாம் வேற்றுமைத்தொகை
e. விடை தெரியவில்லை

142. சரியானவற்றைத் தேர்க.

| | பொருள் | | திணை |
|---|---|---|---|
| 1. | எதிரூன்றல் | – | வெட்சி |
| 2. | மீட்டல் | – | வஞ்சி |
| 3. | செருவென்றது | – | வாகை |
| 4. | எயில் காத்தல் | – | நொச்சி |

a. 1–ம், 2–ம் சரி b. 2–ம், 3–ம் சரி
c. 3–ம், 4–ம் சரி d. 1–ம், 4–ம் சரி
e. விடை தெரியவில்லை

143. பிரித்தெழுதுக: நெடுநாவாய்
a. நெடு + நாவாய் b. நெடுமை + நா + வாய்
c. நெடுமை + நாவாய் d. நெடுநா + வாய்
e. விடை தெரியவில்லை

144. 'நல்ல' எனும் அடைமொழியைப் பெற்ற நூல் எது?
a. நற்றிணை b. குறுந்தொகை
c. அகநானூறு d. ஐங்குறுநூறு
e. விடை தெரியவில்லை

145. 'கடலில்' கரைந்த பெருங்காயம் போல்' இந்த உவமை வாக்கியம் உணர்த்தும் பொருள்
a. பகர்தல் b. கலத்தல் c. வீணாதல் d. ஏமாறல்
e. விடை தெரியவில்லை

146. தெரிநிலை வினையெச்சத்தை எடுத்து எழுதுக :
a. நோயின்றி வாழ்கிறான் b. மெல்ல நடந்தான்
c. நடந்து வந்தான் d. நன்கு பாடினான்
e. விடை தெரியவில்லை

147. பொருத்துக:
A. கை 1. துன்பம்
B. நோ 2. கைப்பற்றுதல்
C. யா 3. ஒழுக்கம்
D. வெள 4. ஒருவகை மரம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

148. ஈற்றயலடி 'சிந்தடி' பெற்று வரும் பா வகை
a. நேரிசைச் சிந்தியல் வெண்பா
b. இன்னிசைச் சிந்தியல் வெண்பா
c. நிலைமண்டில ஆசிரியப்பா
d. நேரிசை ஆசிரியப்பா
e. விடை தெரியவில்லை

149. இலக்கணக்குறிப்பறிந்து பொருத்துக:
A. வழிக்கரை 1. வினைத்தொகை
B. கரகமலம் 2. உரிச்சொற்றொடர்
C. பொங்கடல் 3. ஆறாம் வேற்றுமைத் தொகை
D. உறுவேனில் 4. உருவகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 4 | 1 |
| b. | 3 | 1 | 2 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 2 | 3 | 4 | 1 |

150. அணியைச் சுட்டுக :
"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று"
a. ஏகதேச உருவக அணி
b. எடுத்துக்காட்டு உவமை அணி
c. வேற்றுமை அணி
d. இல்பொருள் உவமை அணி
e. விடை தெரியவில்லை

151. வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றேபவமே தோற்றம் வினைப்பயன் – இப்பாடலடியில் like எனும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்
a. பற்று b. வேட்கை c. நுகர்வு d. தோற்றம்
e. விடை தெரியவில்லை

152. நீடுழி வாழ்க – என்பது
a. விழைவுத் தொடர் b. வினாத் தொடர்
c. உணர்ச்சித் தொடர் d. செய்தித் தொடர்
e. விடை தெரியவில்லை

153. கீழ்க்காண்பனவற்றுள் எத்தொடர் பிறமொழிச் சொல் கலவாதது ?
a. ஆசிரியர் அனுமதி பெற்று வேலன் விடுப்பு எடுத்தான்
b. ஒப்பனை செய்து கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி
c. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்
d. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது
e. விடை தெரியவில்லை

154. "இது செய்வாயா?" என்பதற்கு நீயே செய் என்று மொழியும் விடை
a. உற்றது உரைத்தல் b. உறுவது கூறல்
c. ஏவல் விடை d. வினா எதிர் வினாதல் விடை
e. விடை தெரியவில்லை

155. ஐந்திணைகளில் எத்திணையிலும் இடம் பெறாத சிறு பொழுது எது?
a. யாமம் b. மாலை c. காலை d. ஏற்பாடு
e. விடை தெரியவில்லை

156. "<u>செறுநரைக்</u> காணின் சுமக்க இறுவரை காணின் கிழக்காம் தலை" இக்குறட்பாவில் அடிக்கோடு இடப்பட்ட சொல்லுக்குச் சரியான ஆங்கிலச் சொல்லைத் தேர்க :
a. FOE b. FOB c. FOG d. FOP
e. விடை தெரியவில்லை

157. மலரின் ஏழுவகைப் பருவங்களின் சரியான வரிசையைக் கண்டறிக.
a. மொட்டு, முகை, அரும்பு, மலர், வீ, அலர், செம்மல்
b. அரும்பு , முகை, மொட்டு, மலர், அலர், வீ, செம்மல்
c. அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்
d. மொட்டு, அரும்பு, முகை, மலர், அலர், வீ, செம்மல்
e. விடை தெரியவில்லை

158. உயிர்த்தொடர் குற்றியலுகரத்தைச் சாராதது
a. வரகு b. வரவு c. கடுகு d. மிளகு
e. விடை தெரியவில்லை

159. ஆண்பாற் கூற்றும் பெண்பாற் கூற்றும் இடம் பெற்ற திணைகள்
a. வெட்சி, காஞ்சி b. வெட்சி, கரந்தை
c. நொச்சி, உழிஞை d. கைக்கிளை, பெருந்திணை
e. விடை தெரியவில்லை

160. 'உச்சிமேற் புலவர் கொள்' என்ற அடைமொழியால் குறிக்கப்படுபவர்
I. தொல்காப்பியர்
II. இவர் காப்பியம் படைத்தவர்
III. இவர் ஒரு உரையாசிரியர்
IV. நச்சினார்க்கினியர்
a. I–ம், II–ம் சரியானவை
b. I–ம், II–ம் சரியானவை
c. II, III, IV மூன்றும் சரி
d. III–ம், IV–ம் சரியானவை
e. விடை தெரியவில்லை

161. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் இணை தருக.

| | கலை | | கழை |
|---|---|---|---|
| a. | கலைத்தல் | – | மரம் |
| b. | கவின்கலை | – | மூங்கில் |
| c. | நீக்குதல் | – | கழைக்கூத்து |
| d. | ஒப்பனை | – | தழைத்தல் |

e. விடை தெரியவில்லை

162. பெயர்சொல்லின் வகையறிக : "இகலவர்"
a. வினையாலணையும் பெயர்
b. குறிப்பு வினையாலணையும் பெயர்
c. காரணச் சிறப்புப் பெயர்
d. உவமையாகு பெயர்
e. விடை தெரியவில்லை

163. சந்திப்பிழை இல்லாதத் தொடரைக் கண்டறிக:
a. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்
b. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார் அம்பேத்கர்
c. இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர் அம்பேத்கர்
d. சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர்
e. விடை தெரியவில்லை

164. பிரித்தெழுதுக: கரியன்
a. கரு + அன் b. கருமை + அன்
c. கரிய + அன் d. கரி + அன்
e. விடை தெரியவில்லை

165. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
a. மேதி b. எண்கு c. கேழல் d. மஞ்ஞை
e. விடை தெரியவில்லை

166. சரியான ஈற்றடியைத் தேர்க :
"ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்கு
---------------"
a. பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து
b. பொன்றுந் துணையும் புகழ்
c. தகுதியான் வென்று விடல்
d. அறனல்ல செய்யாமை நன்று
e. விடை தெரியவில்லை

167. பொருத்தமில்லாத் தொடரை கண்டறிக :
a. தமிழ்த்தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரனார்
b. தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர்
c. தமிழ்வேல் உமாமகேஸ்வரனார்
d. நூலகத் தந்தை அறிஞர் அண்ணா
e. விடை தெரியவில்லை

168. இவற்றுள் எது அளவை ஆகுபெயரன்று?
a. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
b. இரண்டு லிட்டர் கொடு
c. மூன்று கிலோ அரிசி கொடு
d. ஐந்து மீட்டர் கொடு
e. விடை தெரியவில்லை

169. பொருத்துக:
A. எஃகு 1. செய்யுளிசை அளபெடை
B. கெழீஇ 2. இன்னிசையளபெடை
C. தொழா அர் 3. சொல்லிசையளபெடை
D. கெடுப்பதூஉம் 4. ஒற்றளபெடை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

170. மயங்கொலிப் பிழையற்ற வாக்கியம் எது?
a. பொருத்தருலுதல் வேண்டும் அரசே!
b. பொருத்தருளுதல் வேண்டும் அறசே!
c. பொருத்தருளுதல் வேண்டும் அரசே!
d. பொருத்தறுழுதல் வேண்டும் அரைசே!
e. விடை தெரியவில்லை

★ 11.6.2022 அன்று பொதுத்தமிழ் – இலக்கணம் – 1 மாதிரி வினா–விடையில் இடம் பெற்ற 4–வது கேள்விக்கு சரியான விடை : d.

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 136 c | 137 b | 138 a | 139 c | 140 b |
| 141 d | 142 c | 143 c | 144 b | 145 c |
| 146 c | 147 d | 148 d | 149 c | 150 d |
| 151 b | 152 a | 153 b | 154 c | 155 c |
| 156 a | 157 c | 158 b | 159 d | 160 d |
| 161 b | 162 b | 163 c | 164 b | 165 d |
| 166 b | 167 d | 168 c | 169 a | 170 c |

நாளை பொது தமிழ்–இலக்கணம் பாட கேள்வி–பதில்கள் தொடரும்.